# வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி

**(AICTE Approved - MBA, Accredited with A+ Grade by NAAC)**

NH-7, கரூர்-மதுரை தேசிய நெடுஞ்சாலை, புத்தாம்பூர் (P.O), கரூர் - 639003


## 17வது பட்டமளிப்பு விழா - நெறிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகள்

அன்புள்ள மாணவ, மாணவிகளுக்கு,

நமது கல்லூரியில் **2023-ம்** ஆண்டு பட்டப்படிப்பு முடித்த மாணவ, மாணவிகளுக்கான **17வது பட்டமளிப்பு விழா 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை** அன்று காலை **10.00 மணியளவில்** கல்லூரி அரங்கத்தில் (College Auditorium) **பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக நெறிமுறைகளின்படி** நடைபெற இருப்பதால், கீழ்க்கண்ட **ஒழுங்கு விதிமுறைகளை** மாணவ, மாணவிகள் தவறாது கடைபிடிக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

1. பட்டமளிப்பு விழாவில் பங்குபெறும் தகுதியுடைய மாணவ, மாணவிகள் அனைவரும் நமது கல்லூரி இணையதளத்தின் (www.vcsm.ac.in) மூலம் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்கான Registration Form மற்றும் Rules & Regulation Form ஆகியவற்றை பதிவிறக்கம் செய்து, முறையாக பூர்த்தி செய்து, அதில் உங்களது Recent Passport Size போட்டோவை ஒட்டி, பட்டமளிப்பு விழா அன்று கட்டாயம் உடன் கொண்டு வருதல் வேண்டும்.

2. புகைப்படத்துடன் கூடிய பூர்த்தி செய்யப்பட்ட Convocation Registration Form மற்றும் Rules & Regulation Form ஆகிய இரண்டையும் உடன் கொண்டு வந்தால் மட்டுமே பட்டமளிப்பு விழாவில் பங்குபெற அனுமதி வழங்கப்படும்.

3. பட்டமளிப்பு விழா அரங்கினுள், பட்டச் சான்றிதழ் பெறும் மாணவ/மாணவிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

4. பட்டமளிப்பு விழா அரங்கினுள் **செல்போன்** கொண்டு வர கண்டிப்பாக அனுமதியில்லை. தவறும் பட்சத்தில் உங்களிடமிருந்து செல்போன் பறிமுதல் செய்யப்பட்டு விழா முடிவுற்றவுடன் திரும்பத் தரப்படும்.

5. பட்டமளிப்பு விழா துவங்கியது முதல் நிறைவடையும் வரை அனைத்து மாணவ, மாணவிகளும் அமைதி காத்து, கண்ணியத்துடனும், ஒழுக்கத்துடனும் நடந்து கொள்வது மிக மிக அவசியம்.

6. பட்டமளிப்பு விழாவில் பங்குபெற இருக்கும் அனைத்து மாணவ, மாணவிகளும் கல்லூரிக்கு **காலை 08.30 மணிக்குள்** வந்து விட வேண்டும்.

7. பட்டமளிப்பு விழாவிற்கு வரும் அனைத்து மாணவ, மாணவிகளும் பதிவுக் கட்டணமாக **ரூ.1000/-** (Registration Fee, Convocation Robe, Convocation File, Photograph & Caution Deposit) செலுத்தி **காலை 9.00 மணிக்குள்** தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். பட்டமளிப்பு விழா நிறைவு பெற்றவுடன், நீங்கள் செலுத்திய பதிவுக் கட்டணத்தில் Caution Deposit **ரூ.500/-யை** திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. **காலை 09.15 மணிக்குள்** மாணவ, மாணவிகள் அனைவரும் பட்டமளிப்பு விழா அரங்கினுள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கையில் மட்டுமே அமர வேண்டும். பட்டமளிப்பு விழா நிறைவடையும் வரை அவரவர் இருக்கையை விட்டு எழுந்து செல்லவோ, அரங்கை விட்டு வெளியில் செல்லவோ எக்காரணம் கொண்டும் அனுமதியில்லை.

9. **காலை 09.30 மணிக்கு மேல்** வரும் மாணவ, மாணவிகளுக்கு பட்டமளிப்பு விழாவில் பங்குபெற எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது. காலதாமதமாக வரும் மாணவ, மாணவிகள் கல்லூரியின் தரைதளத்தில் GF1 என்ற வகுப்பறையில் அமருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். பட்டமளிப்பு விழா முடிவுற்றவுடன் உங்களுக்கான சான்றிதழை கல்லூரி அலுவலகத்திற்கு வந்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

10. சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் பட்டமளிப்பு விழா அரங்கினுள் நுழைந்து, அவரவர் இருக்கையில் அமரும் வரையில் மாணவ, மாணவிகள் அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

11. அதேபோன்று பட்டமளிப்பு விழா முடிவுற்றுச் சிறப்பு விருந்தினர்களும், ஆளவை உறுப்பினர்களும் அரங்கை விட்டு செல்லும் வரையில் மாணவ, மாணவிகள் அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

12. அனுமதிக்கப்பட்ட புகைப்படக்காரர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் மட்டுமே புகைப்படங்கள் எடுக்க அனுமதிக்கப்படுவர்.

## உறுதிமொழி

பட்டமளிப்பு விழா தொடர்பாக **பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம்** வகுத்துள்ள மேற்குறிப்பிட்ட அனைத்து **நெறிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளையும்** கட்டாயம் கடைபிடிப்பேன் என்றும், தவறும் பட்சத்தில் கல்லூரி எடுக்கும் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கைக்கும் உடன்படுகிறேன் என்றும் இதன்மூலம் நான் உறுதியளிக்கின்றேன்.

**மாணவ/மாணவி கையொப்பம்**